# 2007 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கலைத்திட்டம் க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ்மொழிப் பாடஅடைவில் ஏற்படுத்திய மாற்றம்

ஞானரெத்தினம், க.

திறந்த பல்கலைக்கழகம், இலங்கை
*kgnan@ou.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம் –** எமது நாட்டில் பாடசாலை முறைசார் கல்வியில் க.பொ.த.(சா/த) பரீட்சை முக்கியமான ஒரு பரீட்சை ஆகும். பதினொரு வருட பாடசாலைக் காலத்தின் அறுவடையாகவும் இது கருதப்படுகின்றது. க.பொ.த.(உ/த) வகுப்பிற்கு தகைமை பெறுதல், தொழினுட்ப கல்லூரிக்கு அனுமதி பெறல், சிறிய தொழில்வாய்ப்புக்கள் பெறல் என்பனவற்றிற்கு க.பொ.த.(சா/த) பரீட்சையின் அடைவு மிக முக்கியமானதாகும். ஆயினும் க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவுகள் திருப்திகரமான நிலையில் இல்லை என்பதனைப் பரீட்சைத் திணைக்கள புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பரீட்சைக்குத் தோற்றியோரில் சுமார் 60% ஆனோர் மாத்திரமே க.பொ.த.(உ/த) வகுப்பிற்கு தகைமை பெறுகின்றனர் எனவும் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களிலும் சுமார் 5% ஆனோர் சித்திபெறத் தவறுகின்றனர் எனவும் முக்கிய பாடமான கணித பாடத்தில் சுமார் 50% ஆனோரே சித்திபெறுகின்றனர் எனவும் தாய் மொழியான தமிழ்மொழிப்பாடத்தில் சுமார் 25% ஆனோர் சித்திபெறத் தவறுகின்றனர் எனவும் இப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.தாய் மொழிப் பாடத்தில் இத்தகைய வீழ்ச்சி நிலை எதிர்காலத்தை பாதிப்படையச் செய்வதோடு மாணவர்களின் அனைத்துக் கல்வி நடவடிக்கைகளிலும் தாக்கம் செலுத்தக் கூடியது. இதன்காரணமாக பரீட்சை அடைவுகளை மேம்படுத்தல், மாணவர்களின் திறன்களை விருத்தி செய்தல்என்பனவற்றைக் கருத்தில் கொண்டும் பாதுகாப்பான எதிர்காலத்திற்காகவும் 2007ஆம் ஆண்டு புதிய கலைத்திட்டம் தேசிய ரீதியில் அறிமுகம் செய்யப்பட்டது. இக்கலைத்திட்டமானது 21ஆம் நூற்றாண்டின் இடைநிலைப் பாடசாலைக்கான முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பாகக் கருதப்பட்டது. இக்கலைத்திட்ட மாற்றத்திற்கு அமைவாக 2008ஆம் ஆண்டு முதல் தடவையாக க.பொ.த.(சா/த) பரீட்சை நடாத்தப்பட்டது. இதுவரையில் 2015ஆம் ஆண்டு வரை எட்டு வருடங்கள் இப்பரீட்சை நடைபெற்று முடிந்துள்ளது. இக்கலைத்திட்டமானது க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்மொழிப்பாட அடைவில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஆராய்வதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். மட்டக்களப்பு மாவட்டம் ஆய்வுப் பிரதேசமாகக் கருதப்பட்டு அளவை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்ட இவ் ஆய்வில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் மாணவரின் அடைவைத் தீர்மானிப்பதில் முக்கிய காரணிகளான தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள், தமிழ்மொழிப் பாடத்தின் கூட்டல் இடை என்பன கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

அளவுசார், பண்புசார் தரவுகள் இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகள் யாவும் SPSS Softwareமூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பகுப்பாய்வு மூலம் இப்புதிய கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் தேசிய ரீதியில் க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவில் தமிழ்மொழிப் பாடத்தின் கூட்டல் இடைப் பெறுமானமும் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களும் குறைவடைந்து செல்வதனையும அறிய முடிகின்றது. மேலும் கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம் 0.05 மட்டத்தில் பொருண்மையாகவுள்ளமையும் அறியப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் முஸ்லிம் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் மாத்திரம் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள் அதிகரித்துச் செல்ல ஏனைய நான்கு கல்வி வலயங்களிலும் ஒழுங்கற்ற விதத்தில் குறைவடைந்து செல்கின்றன என்பதனையும் இவ் ஆய்வு மேலும் வெளிப்படுத்தியது.பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு க.பொ.த.(சாஃத) பரீட்சையில் தமிழ்மொழிப் பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் –** தமிழ்மொழி, பாடஅடைவு, கலைத்திட்டம், பரீட்சை, திறன்கள்

## I. ஆய்வு அறிமுகம்

மாணவர் தமது கட்டிளமைப் பருவத்தில் தேசிய ரீதியான க.பொ.த.(சா.்.த) பரீட்சைக்கு தோற்றுகின்றனர். பாடசாலைக் காலத்தில் பதினொரு வருடங்கள் கற்றல் பணியில் ஈடுபட்ட மாணவர்களின் முக்கிய அறுவடையாகவும் இது கருதப்படுகின்றது. எமது நாட்டில் வருடாந்தம் சுமார் மூன்று இலட்சம் மாணவர்கள் பாடசாலைப் பரீட்சார்த்திகளாக முதல்தடவையில் இப்பரீட்சைக்குத் தோற்றி வருகின்றனர். இவர்களில் சுமார் ஆறு சதவீதமானோர் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றுவருவதாகவும் கணித பாடத்தில் சுமார் 50 சதவீதமானோர் மாத்திரமே சித்தி பெறுவதாகவும் தாய்மொழியாகிய தமிழ் பாடத்தின் சித்தி வீதம் குறைந்து வருவதாகவும் பரீட்சைத் திணைக்களப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டம் கருதப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்கள் உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக பத்து தேசிய பாடசாலைகள் உள்ளன. அதேவேளை 1AB பாடசாலைகள் 24, 1C பாடசாலைகள் 57, வகை II பாடசாலைகள் 112, வகை III பாடசாலைகள் 150 உட்பட மொத்தமாக 343 பாடசாலைகள் உள்ளன. மேலும் மாவட்டத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 129, 500ஆகவும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 6570 ஆகவும் உள்ளது.

பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு கால மாற்றத்திற்கேற்ப கல்விக் கொள்கைகளும் மாற வேண்டியது யதார்த்தம் ஆகும். பல்வேறு சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு

2007 இல் கலைத்திட்ட மறுசீரமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது. இக்கலைத்திட்டமானது 21 ஆம் நூற்றாண்டின் இடைநிலைப் பாடசாலைக்கான முதலாவது கலைத் திட்ட மறுசீரமைப்பாகக் கருதப்பட்டது. இக்கலைத்திட்டமானது முக்கியமாகத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்கு, திறன், ஆளிடைத் தொடர்பு ஆகிய பல்வேறு கூறுகளின் சேர்க்கை ஆகும் (கினிகே,2008). கற்பித்தல் முறையானது பாரம்பரிய விரிவுரை முறையில் இராது மாணவர்களுக்கு தேர்ச்சிகளை ஏற்படுத்தும் வண்ணம் குழுச்செயற்பாடு சார்ந்ததாக அமைந்திருக்க இக்கலைத்திட்டம் வழிகாட்டியது. இதனூடாக சிந்தனைத்திறன், சமூகத்திறன், சுயதிறன்கள் ஆகிய மூன்று திறன்களும் மாணவரிடையே ஏற்படவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இக்கலைத்திட்டத்தில் ஆசிரியர் நிலைமாற்ற வகிபாகத்தை ஏற்க வேண்டியவராகின்றார். இதன்மூலம் தலை (Head), கை (Hand), இதயம் (Heart) (3H) ஆகியவற்றின் முழுமையான தொழிற்பாட்டினூடாகக் கருதப்பட்ட மூன்று தேர்ச்சிகளையும் மாணவர் அடைவார்கள் [2]. பாடத்தை திட்டமிடுவதற்காக "5E செயற்பாட்டுத் திட்டம்" என்ற ஒரு மாதிரி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

### II. சார்பிலக்கிய மீளாய்வு

வகுப்பறையில் ஆசிரியரின் பின்வரும் செயற்பாடுகள் மாணவர்களின் கல்வி அடைவை உயர்த்தவல்லன. அவை பாடப்பரப்பில் ஆழமான விடயத்தைப் பிரயோகித்தல், விமர்சன ரீதியான எண்ணத்தை விருத்தி செய்தல், மாணவர்களின் உற்சாகத்தை மேம்படுத்தல், சிறிய குழுக்களாக்கித் தனிப்பட்ட கவனத்தைப் பயன்படுத்தல், மேலதிக வளங்களை மாணவர்களுக்கு வழங்குதல், ஆசிரியர்களுடன் கூடி வேலை செய்தல், வாண்மை விருத்தி என்பனவாகும். [3]. பரீட்சையொன்றில் குறித்த நேரத்தில் மாணவர் வெளிப்படுத்துகின்ற உண்மையான முன்னேற்றமே "கல்வி அடைவு" ஆகும். குறித்த பாடத்தில் மாணவர் அடைந்துள்ள இக்கல்வி அடைவை அளவீடு செய்வதற்காக பாடசாலைகளில் "அடைவுப் பரீட்சைகள்" நடாத்தப்படுகின்றன [4].

Ohioஇல்2005ஆம் ஆண்டில் தேசிய மத்திய பாடசாலைச் சம்மேளனத்தினால் (National Middle School Association) மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இடைநிலைக் கல்வி மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் பெற்றார் தொடர்பான பின்வரும் காரணிகள் அறியப்பட்டுள்ளன.

i. வீட்டில் பெற்றாரின் பயிற்சி
ii. பாடசாலை,வீடு என்பனவற்றிற்கிடையேயான தொடர்பு
iii. பாடசாலையுடன் பெற்றாரின் ஒத்துழைப்பு
iv. வீட்டில் மாணவர்களின் சுயகற்றலோடு தொடர்புபடல்.மாணவர்தொடர்பான தீர்மானங் களை மேற்கொள்ளல்.

1984 ஆம் ஆண்டு UNESCO இலங்கையின் கல்வி அடைவு தொடர்பாகச் செய்த ஆய்வில் "ஆசிரியர் தொடர்பான காரணிகளாகப்" பின்வருவனவற்றை இனங் கண்டுள்ளது.

- போதிய பாட ஆயத்தமின்மை
- மாணவர்களின் ஆற்றல் இனங்காணப்படாமை
- கலைத்திட்டம் தொடர்பான போதிய தெளிவின்மை
- புத்தாக்க கற்பித்தல் முறைகளை பயன்படுத்தாமை என்பனவாகும்.

### III. ஆய்வுப் பிரச்சினை

க.பொ.த.(சா∵த) பரீட்சையில் தாய் மொழியாகிய தமிழ் பாடத்தின் சித்தி வீதம் குறைந்து வருகின்றது. இது தேசிய ரீதியிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

### IV. ஆய்வு வினா

i. 2007 ஆண்டு அறிமுகம்செய்யப்பட்ட கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் தேசிய ரீதியில் க.பொ.த.(சா∵த)பரீட்சையில் தமிழ்மொழிப் பாட அடைவு எந்நிலையில் உள்ளது?
ii. 2007 ஆண்டு அறிமுகம்செய்யப்பட்ட கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் க.பொ.த.(சா∵த)பரீட்சையில் தமிழ்மொழிப் பாட அடைவு எந்நிலையில் உள்ளது?
iii. புதிய கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் க.பொ.த.(சா∵த) பரீட்சையில் தமிழ் மொழிப்பாட அடைவில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது?

### V. ஆய்வின் நோக்கம்

i. தேசிய ரீதியில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்மொழிப் பாட அடைவை கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் அறிதல்.

ii. மட்டக்களப்புமாவட்டத்தில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்மொழிப் பாட அடைவை கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் அறிதல்.
iii. புதிய கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ் மொழிப்பாட அடைவில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதனைக் கண்டறிதல்.
iv. க.பொ.த.(சா.்.த) பரீட்சையில் தமிழ் மொழிப்பாட அடைவை மேம்படுத்துவதற்கான பொருத்தமான ஆலோசனைகளை முன்வைத்தல்.

**VI. ஆய்வு முறையியல்**

**ஆய்வு வடிவம்**

இவ் ஆய்வில் "அளவை ஆய்வு வடிவம்" பயன்படுத்தப்பட்டுள்ளது. சமகால உண்மை நிலைமைகளை

ஆராய்ந்து சரியான முடிவுகளை அளிக்கும் பரிசோதனை முறைமையே அளவை ஆய்வு வடிவமாகும்.

**குடித்தொகை**

மாவட்டத்தில் இருந்து க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் அனைவருமே இவ் ஆய்வின் குடித்தொகையாகும். இவர்களின் பரீட்சை அடைவுகள் பரீட்சைத் திணைக்களத்தில் இருந்தும் கல்வி வலயங்களில் இருந்தும் பெறப்பட்டன. மேலும் இப்பரீட்சையானது பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சை என்பதால் பரீட்சை அடைவுகள் கூடிய நம்பகம் உடையதும் ஆகும்.

**மாதிரி எடுப்பு**

பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்மொழிப் பாடத்தின் அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டியது ஆய்வாளரின் பிரதான கடமையாகும். இவ் ஆலோசனைகளைப் பெறுவதற்காகத் தமிழ் மொழிப் பாடத்தின் சிரேஷ்ட ஆசிரியர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் உதவிக் கல்விப்பணிப்பாளர்களும் மாதிரிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, மட்டக்களப்புமத்தி, மட்டக்களப்புமேற்கு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய ஐந்து கல்வி வலயங்கள் உள்ளன. ஐந்து கல்வி வலயங்களிலும் தமிழ்மொழிப் பாடத்திற்கு ஆசிரிய ஆலோசகர் ஐவரும், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஐவரும், உள்ளனர். இவர்கள் பத்துப் பேருடன் ஒவ்வொரு கல்வி வலயங்களில் இருந்தும் தமிழ் மொழிப் பாடம் கற்பிக்கும் பத்து சிரேஷ்ட ஆசிரியர்கள் வீதம் மொத்தமாக 50 பேர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களை அனுபவம், திறமை அடிப்படையில் தமிழ்மொழிப் பாடத்திற்கான உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் தெரிவு செய்து தந்துள்ளனர். இவர்கள் அனைவரிடமிருந்தும் பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் பெறப்பட்டன.

**ஆய்வுக்கருவி**

பிரதானமான ஆய்வுக்கருவியாக வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட 60 பேரிடமும் தகவல்கள் பெறப்பட் டுள்ளன. இவ்வினாக்கொத்து ஆய்வாளரினாலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. இது பொதுவான தகவல்கள், அடைவில் ஏற்பட்ட மாற்றங்கள், அடைவு மாற்றத்துக்கான காரணங்கள், அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் ஆகிய நான்கு தலைப்புக்களை உள்ளடக்கியது. இவற்றுள் பரீட்சை அடைவு மாற்றத்திற்கான காரணங்கள் என்ற தலைப்பானது இவ் ஆய்வுடன் நெருங்கிய தொடர்புபட்டதாகும். இது பரீட்சை அடைவில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளான ஆசிரியர், மாணவர், அதிபர், கல்வி நிருவாகம் என்பனவற்றைக் கருத்தில்கொண்டுள்ளது. அத்துடன் இக் காரணிகள் யாவும் மொத்தமாக 30 செயற்பாடுகளை உள்ளடக்கி இருந்தன. கல்முனை கல்வி வலயத்தைச் சேர்ந்த சிரே'ட ஆசிரியர் இருபது பேருக்கு இவ்வினாக்கொத்தானது முற்சோதனையாக நடாத்தப்பட்டுத் திருத்தம் செய்யப்பட்டது.

**VII. தரவுப் பகுப்பாய்வு**

தரவுகள் யாவும் SPSS Software மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நூற்று வீதம், இடை, இணைவுக் குணகம், t-test ஆகிய புள்ளிவிபர நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொருத்தமான இடங்களில் புள்ளி வரைபுகளும், சலாகை வரைபுகளும் காட்டப்பட்டுள்ளன.

### VIII. முடிவுகளும் பரிந்துரைகளும்

**I .தமிழ்மொழிப் பாடத்தில் தேசிய ரீதியான கூட்டல் இடை தொடர்பான முடிவுகள்**

அட்டவணை **I**:
க.பொ.த.(சா/த)பரீட்சையில் தமிழ்மொழிப் பாடத்தில் தேசிய ரீதியான கூட்டல் இடை


| ஆண்டு | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கூட்டல் இடை | 48.99 | 50.73 | 45.31 | 45.26 | 43.98 | 44.46 | 42.13 | 41.75 |

பரீட்சையொன்றில் குறித்த ஒரு பாடத்திற்கு தோற்றிய மாணவர்கள் உயர்வான புள்ளிகளைப் பெறுகின்றபோது அப்பாடத்தின் கூட்டல் இடைப்பெறுமானமும் உயர்வாக இருக்கும். இதனால் ஒரு பாடத்தின் அடைவின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு “கூட்டல் இடை” ஒரு சிறந்த அளவையாகும்.

i. தேசிய ரீதியில் தமிழ் மொழிப்பாடத்தின் கூட்டல் இடைப்பெறுமானம் உயர்வாக இருப்பதனையும் 2007 ஆண்டின் பின்னர் சிறிது குறைந்து வருவதனையும் மேலுள்ள அட்டவணை 1 வெளிப்படுத்துகின்றது.

**II. தமிழ்மொழிப்பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான முடிவுகள்**

a. தேசிய ரீதியில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம்




உரு I: தேசிய ரீதியில் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள்
இவ் உருபில் இருந்து

ii. தேசிய ரீதியில் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள் ஒழுங்கற்ற விதத்தில் குறைவடைந்து செல்கின்றன என்பதனையும்

iii. தேசிய ரீதியில் இக் குறைவானது 2007-கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் மிகவும் அதிகமாக உள்ளது என்பதனையும் அறிய முடிகின்றது.


அட்டவணை **II**:
2017 ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் தேசிய ரீதியல் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் கூட்டல் இடைகள்.

| | ஆண்டுகளின் எண்ணிக்கை | கூட்டல் இடை |
|---|---|---|
| கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னர் | 3 | 81.69 |
| கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் | 5 | 77.45 |

iv. கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னருள்ள மூன்று வருடங்களின் தமிழ் மொழிப் பாடத்தின் கூட்டல் இடைப்பெறுமானத்தை விட கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னருள்ள ஐந்து வருடங்களின் கூட்டல் இடைப் பெறுமானம் குறைந்துள்ளது என்பதனை அட்டவனை 11 வெளிப்படுத்துகின்றது.

v. கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம் 0.05 மட்டத்தில் பொருண்மையாகவுள்ளதனை t-test வெளிப்படுத்தியது.

b. மட்டக்களப்பு மாவட்டத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம்.
(கல்வி வலயங்கள் ரீதியில்)



உரு II: மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள்.

இவ் உருவில் இருந்து

vi. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் மாத்திரம் தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள் அதிகரித்துச் செல்ல ஏனைய நான்கு கல்வி வலயங்களிலும் ஒழுங்கற்ற விதத்தில் குறைவடைந்து செல்கின்றன என்பதனையும் அறிய முடிகின்றது.

vii. தமிழ்மொழிப் பாடத்தில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தை தவிர ஏனைய நான்கு கல்வி வலயங்களிலும் கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னய காலப்பகுதியைவிட பின்னரான காலப்பகுதியில் மிகவும் ஒழுங்கற்ற விதத்தில் குறைவடைந்து செல்கின்றன என்பதனையும் அறிய முடிகின்றது.

**வினாக்கொத்தின் துலங்கல் தொடர்பான பகுப்பாய்வு முடிவுகள்**

க.பொ.த.(சா.்.த) பரீட்சையில் தமிழ் மொழிப்பாட அடைவில் அதிகூடிய செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக பின்வருவன முன்வைக்கப்பட்டுள்ளன.

- ஆசிரியரின் தமிழ்ப் பாடப்புலமை
- ஆசிரியரின் பாட ஆயத்தம்.
- ஆசிரியரின் கற்பித்தல்முறை.
- ஆசிரியர் மாணவரை எழுத, வாசிக்க தூண்டுதல்
- தினசரி வீட்டு வேலை வழுங்குதலும் ஊக்கப்படுத்தலும்.
- ஆசிரியரால் பாடப்பரப்பு பூரணப்படுத்தப்படல்.
- மாணவரின் பாடசாலை வரவு.
- மாணவர்கள் கொண்டுள்ள முன்னய தமிழ் பாட அறிவு
- மாணவர் தமிழ் பாடத்தில் கொண்டுள்ள ஆர்வம்.
- மாணவர்களின் வாசிப்புத்திறனும் கிரகிக்கும் ஆற்றலும்
- மாணவர்களின் சுயகற்றல் பாணியும் சுயகற்றல் நேரமும்
- பெற்றார்களின் மேற்பார்வையும் ஊக்குவிப்பும்
- அதிபரின் வகுப்பறை மேற்பார்வையும் ஊக்கப்படுத்தலும்
- வலய, மாகாண மட்ட மேற்பார்வையின் தரமும் ஒழுங்கமைப்பும்

**விதந்துரைகள்**

இவ் ஆய்வின் பகுப்பாய்வு, இலக்கிய மீளாய்வு, பாடநிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டும் பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டும் க.பொ.த.(சா.்.த) பரீட்சையில் தமிழ்ப் பாட அடைவு தொடர்பாக ஆய்வாளரினால் பின்வரும் விதந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

1. தாய் மொழியான தமிழ்மொழி ஒரு மிகமுக்கிய பாடமாகும்.கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் தேசிய ரீதியில் தமிழ் மொழிப் பாடத்தின் கூட்டல் இடைப்பெறுமானங்களும் சித்திவீதங்களும் குறைவடைந்து செல்கின்றன. மாணவர்களின் பாடப்புலமை குறைவால் அல்லது வினாப்பத்திரத்தின் கடினதன்மையால் இது ஏற்படலாம். இதற்கான காரணத்தை ஆய்வு செய்யவேண்டியது அவசியமாகின்றது.
2. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களில் மட்டக்களப்பு மத்தி கவ்வி வலயத்தின் தமிழ்பாட அடைவு உயர் நிலையில் இருப்பதனை இவ் ஆய்வு மேலும் வெளிப்படுத்துகின்றது. இக் கல்வி வலயம் முஸ்லிம் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட தனி வலயமாகும். பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு தமிழ் மாணவர்களை விட முஸ்லிம் மாணவர்கள் தமிழ் மொழிப்பாடத்தில் உயர்வான அடைவை வெளிப்படுத்துவதற்கான காரணங்களை கண்டறிய வேண்டியது மிக முக்கியமானதாகும்.இதன் மூலம் இக் கவ்வி வலயத்தில் பயன்படுத்தப்படும் உத்திகளை ஏனைய கல்வி வலயங்களும் முன்மாதிரியாகக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.
3. மாணவர்களின் செயற்பாடுகளில் வீட்டுவேலை ஈடுபாடு, வாசிகசாலைப் பயன்பாடு என்பனவும் சாதகமான நிலையில் இல்லை. பரீட்சை அடைவில் மாணவர்களின் சுயகற்றலானது கூடிய செல்வாக்குச் செலுத்துவதாக இலக்கியமீளாய்வில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மாணவர்கள் இவற்றில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இதன் மூலம் தமிழ் மொழிப் பாடத்தின் பரீட்சை அடைவு மேம்பட வாய்ப்பு ஏற்படும்.
4. பரீட்சையில் தமிழ் மொழிப் பாடஅடைவில் செல்வாக்கு செலுத்தும் நான்கு பெரும் காரணிகள் இவ் ஆய்வில் கருத்தில் கொள்ளப்பட்டன. மாணவர் தொடர்பான காரணிகள், ஆசிரியர் தொடர்பான காரணிகள், அதிபர் தொடர்பான காரணிகள், பெற்றார் தொடர்பான காரணிகளே அவை. இவற்றுள்

அதிபர் தொடர்பான காரணிகளில் அதிகமான திருப்தியின்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை மேம்படுத்திக் கொள்வதற்கு அதிபர்கள் முயற்சி எடுக்கவேண்டும். இந்த விடயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கூடிய கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

5. மாகாண மட்ட மேற்பார்வை, உள்ளக மேற்பார்வை என்பன மிகவும் திருப்தியின்மையாக உள்ளதாக அறியப்பட்டுள்ளன. மேற்பார்வை அதிகரிக்கப்படும்போது பரீட்சை அடைவுகளும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் அதிபர்களும், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களமும் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.

**உசாத்துணைகள்**

1. இலங்கை பரீட்சைத் திணைக்களம். "புள்ளிவிபரக் கைநூல் 2005-2007". கொழும்பு ,ஆய்வு அபிவிருத்திக்கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், 2008.
2. கினிகே,I.L. "தேர்ச்சிகளைஅடிப்படையாக கொண்ட கலைத்திட்டமும். செயற்பாட்டுத் திட்டங்களும்". நுகேகொடை: வரையறுக்கப்பட்ட தீபானி அச்சு வெளியீட்டு கம்பனிஇ 2008.
3. Deepa Franky, "Psycho-social correlates of academic achievement of students international Journal of current Research and academic Review", Volume - 2, Number 2 (February-2014), pp.148-158,2013.
4. [4]. Raed Zedan ,"New Dimensions in the Classroom Climate, Learning Environments Research", Vol. 13(1), pp.75-88,2017.